<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.பொள்ளாச்சி</u>

நாள்: 10.11.2025 அ.வ.எண். 343/2022. வா.சா.1. சாந்தி, க/பெ. மோகன்குமார்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பா சண்முகத்திற்கு வாரிசு சான்றிதழ் வேண்டிவழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் எங்கு இறந்தார் என்றால் கிணத்துக்கடவில் அவரது வீட்டில் வைத்து இறந்துவிட்டார். எனது தாத்தா, பாட்டி குறித்த விவரம் எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு யார் யார் வாரிசுகள் என்றால் வாதிகளாகிய நாங்களும் 1ம் பிரதிவாதியும் ஆவோம். எனது தகப்பனாரின் பெற்றோர்கள் குறித்த விவரங்கள் எனது தாவாவில் குறிப்பிடாததால் நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.